**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண். 12 /2023

வாதி தரப்பு 2வது சோலை என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சோலை | வயது | : | 42/2025 |
| தகப்பனார் பெயர் | : | கருப்பையா | தாலுகா | : | திருமயம் |
| கிராமம் | : | ராயவரம் | தொழில் | : | மளிகை கடை வியாபாரம் |

நாள்-21.11.2025

வா.சா.2

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**1) இந்த** வழக்கு வாதி என்னுடைய மைத்துனர் என்றால் சரிதான். மீனாள் எனது சகோதரி என்றால் சரிதான்.

2) வாதி என்ன படித்துள்ளார் என்று தெரியாது. வாதி பெயரில் நீதிமன்றத்தில் கடனுறுதி சீட்டின் பேரில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3) எனக்கு நீதிமன்றத்தில் கடனுறுதி சீட்டின் பேரில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் இல்லை. சாட்சியாகத்தான் போட்டுள்ளேன்.

4) நான்கு வழக்குகளில் நான் வாதிக்காக சாட்சி கையெழுத்துக்கள் போட்டுள்ளேன்.

5) வாதி விவசாயம் பார்த்து வருகிறார். 29.12.2019ம் தேதியன்று காலை 6.00 மணிக்கு வாதி என்னை 10.15 மணிக்கு சாட்சி கையெழுத்து போடுவதற்கு என்னை அழைத்தார்.

6) நான் ராயவரத்தில் மளிகை கடை வைத்திருக்கிறேன். எனது கடைக்கும் வாதி வீட்டிற்கும் இடையே நடந்து போகும் தூரம்தான். நான் கையில் ரூ.3,00,000/- கொண்டு போயிருந்தேன். ஒரு வாரத்திற்கு முன்பே மூன்று லட்சம் வேண்டும் என்று கேட்டிருந்தார். நான் கொண்டு சென்ற பணத்தை வாதியிடம் காலை 10.15 மணிக்கு கொடுத்தேன்.

7) பிரதிவாதியின் மனைவியை எனக்கு தெரியும். என்ன குடும்ப செலவுக்காக பணம் கேட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

மு.மா.நீ,

8) பிரதிவாதியின் மனைவி பஞ்சாயத்து தேர்தலில் வேட்பாளராக நின்றால் என்றால் சரிதான். தேர்தலுக்காக பணம் வாங்கியதாக வாதி சொல்வது எனக்கு தெரியாது.

9) தேர்தலுக்கு முன்பாக எவ்வளவு நாட்களுக்கு முன்பு பணம் கேட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது. பணம் கொடுத்து ஒருநாள், இரண்டு நாள்களுக்குள் தேர்தல் நடந்ததாக ஞாபகம்.

10) நான் கொடுத்த பணம் வாதி எதற்காக வாங்கினார் என்றால் வாதி தனக்கு தேவை இருப்பதாக கேட்டார்.

11) நான் பணம் கொடுக்க 10.15 மணிக்கு சென்றபோது அங்கு கணேசன், சிதம்பரம், சரவணன் ஆகியோர் இருந்தார்கள்.

12) வேறு யாரும் வந்தார்களா என்றால் வேறு யாரும் வரவில்லை. அங்கு முக்கால் மணி நேரம் இருந்தேன். நான் கொடுத்த பணம் காய்கறி வியாபாரம் மற்றும் விவசாயம் மூலம் எனக்கு கிடைத்தது.

13)முதல் கைரேகை சரியாக விழவில்லை என்பதால், மற்றொரு கைரேகை வைத்தார்.

14) நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில், வாதி கைவசம் ரூ.7,00,000/-ம்தான் இருந்தது என்றால் சரிதான்.

15) நான் சொன்ன தேதியில், பிரதிவாதி வாதியிடம் கடன் வாங்கவில்லை என்றாலும், கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கவில்லை என்றாலும், அந்த நேரத்தில் சாட்சிகள் யாரும் கையெழுத்து போடவில்லை என்றாலும், நானும் ரூ.3,00,000/- கொடுக்கவில்லை என்றாலும், வாதி எனக்கு உறவினர் என்பதால் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.